FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319425

1. District மாவட்டம்: Coimbatore PS: V&PC காவல்நிலையம் Year ஆண்டு: 2026 FIR No.: 7/2026/AC ICB முத.அ. எண் Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.06.2026, 15.06.2026 & 18.06.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.06.2026 Time : நேரம் 17.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol. I Time : நேரம் 17.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 15 km in North East.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி o/o. Assistant Executive Engineer, Saravanampatty, TANGEDCO, Coimbatore North circle, Chinnavedampatty.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Deepan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Manoharan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/2026 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Private Company COO. (g) Address : முகவரி BSBK Solar Solution P. Ltd., May Flower Signature, No. 7B, Avanashi Road, Peelamedu, Coimbatore - 641004

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. M. Kathirvel, Assistant Executive Engineer, Saravanampatty, TANGEDCO. Coimbatore North circle. Chinnavedampatty.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted : Before the Principal District and Sessions Court, Coimbatore

Separate Sheets attached herewith.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.D 19/6/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

R. Ezhilarasi 19/06/2026
Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 19.06.2026 @ 08.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Coimbatore.
19.06.2026.

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8319425-ன் தொடர்ச்சி.

நேற்று 18.06.2026-ம் தேதி வியாழக்கிழமை 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர்,பீளமேடு, அவினாசி ரோடிலுள்ள மே பிளவர் சிக்னேச்சரில் கதவு எண்.7B-ல் அமைந்துள்ள B&BK சோலார் சொலுசன்ஸ் பி.லிமிட்., என்ற நிறுவனத்தின் Chief Operating Officer ஆன திரு.M.தீபன் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியின் மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அப்புகாரினை படித்து பார்த்து, அப்புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் / வடக்கு, சரவணம்பட்டி உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துவரும் திரு.M.கதிர்வேல் என்பவர், விளாங்குறிச்சி, நல்லதண்ணீர்தோட்டதில் அமைந்துள்ள வாதியின் உறவினர் திரு.சண்முகம் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் வாதியின் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள 60Kw RoofTop Solar Project-டிற்குNet-Meter பொருத்துவதற்கு பரிந்துரை செய்ய ரூ.90,000/-ஐ லஞ்சமாக கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 19.06.2026-ம் தேதி 7.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2026/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.M.கதிர்வேல் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்: M.தீபன், வயது 28,த/பெ.மனோகரன்,COO, B&BK Solar Solution பி.லிமிட்., மே பிளவர் சிக்னேச்சர்,எண்.7B, அவினாசி ரோடு, பீளமேடு, கோயம்புத்தூர்- 641 004. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,கோயம்புத்தூர்.அய்யா/அம்மா,நான் கோயம்புத்தூர் கணபதி மாநகரிலுள்ள முத்து கார்டனில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கோவை அவினாசி சாலை பீளமேட்டில் உள்ள May Flower Signature Commercial Complex-ல் இயங்கிவரும் Helios Sunshine Private Limited என்ற நிறுவனத்தின் Chief Executive Officer-ஆகவும் B&BK Solar Solutions என்ற பெயரில் சூரிய மின்சார அமைப்புகளுக்கான சோலார் Panel வடிவமைப்பு,Installation, பராமரிப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் சேவைகளை வழங்கும் நிறுவனத்தின் Chief Operating Officer ஆக உள்ளேன். எனது நிறுவனத்திலுள்ள 5 இயக்குநர்களில் நானும் ஒருவன். எனது மனைவியின் அப்புச்சி திரு.சண்முகம் என்பவருக்கு சொந்தமான இடத்தில் அவர் Work Shop ஒன்றை வாடகைக்கு விட்டுள்ளார். அதற்கான மின் இணைப்பானது Commercial Tariff ஆகும். அதில் ஒரு யூனிட்டுக்கு ரூ.11/- வரை வாடகைதாரருக்கு செலவாகிவருதால்மேற்படி இடத்தில் சோலார் பேனலை வடிவமைத்தால் வாடகைதாரரின் மின்சாரத்திற்கான செலவினை கட்டுப்படுத்தலாம் எனவும், மேலும் அவருக்கு கூடுதலாக வருமானம் வர வாய்ப்பிருக்குமென்பதால்,Solar Panel அமைப்பதற்கான வேலைகள் அனைத்தையும் என்னையே முடித்து தரும்படி மேற்படி திரு.சண்முகம் அவர்களின் மகனும் எனது மனைவியின் தாய்மாமாவுமான திரு.சம்பத் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதின்

அடிப்படையில் நான் கோவை விளாங்குறிச்சி நல்லதண்ணீர் தோட்டத்திலுள்ள மேற்படி Work Shop இயங்கி வரும் கட்டிடம் அமைந்துள்ள இடத்தை பார்வையிட்டு அந்த கட்டிடத்தில் 60 கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யும் திறன் கொண்ட Solar Panel-ஐ நிறுவ திட்டமிட்டு அதற்கான ஏற்பாடுகளை செய்தோம். அதுநிமித்தம் அரசு வழங்கும் உரிய Safety Certificate-ஆனது கடந்த 29.05.2026-ம் தேதி பெறப்பட்டது. பின்னர் 60 கிலோவாட் மின்உற்பத்தி செய்யும் திறன் கொண்ட Solar Panel-ஐ நிறுவுவதற்கு கோவை சரவணம்பட்டியிலுள்ள சின்னவேடம்பட்டி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு ஆன்லைன் மூலம் கடந்த 30.05.2026-ம் தேதி நெட்மீட்டர் கட்டணம் உட்பட மொத்தம் ரூ.10,596/- ஆனது செலுத்தப்பட்டது. அதன்பின்னர் 10.06.2026-ம் தேதியன்று மாலையில் எனது உறவினர் திரு.சண்முகம் அவர்களின் இடத்திற்கு, சரவணம்பட்டி உதவி செயற்பொறியாளர் திரு.கதிர்வேல் அவர்கள் நேரில் வந்து எங்களது Project வேலைகளை ஆய்வு செய்து அன்றைய தினமே அவருடைய செல் நம்பர் 9445851102-லிருந்து என்னுடைய செல் நம்பர் 7871420130-ல் தொடர்பு கொண்டு, அவர் மேற்படி சைட்டில் தான் இருக்கேன் என்றும் அது சம்மந்தமாக என்னிடம் பேசவேண்டும் என்றும் தெரிவித்தார். உடனே நான் எனது Project Engineer திரு.ஜெப்ரி என்பவர் அவரை அழைப்பார் என்ற விபரத்தை தெரிவித்தேன். அதன்படி ஜெப்ரியும் AEE அவர்களை தொடர்பு கொண்டு பேசினார். மேலும் மேற்படி எங்கள் Project-ல் அனைத்து வேலைகளும் முறையாக செய்திருந்தும் அவர் ஏதோ காரணத்திற்காக எதுவும் சரியாக இல்லை என்று தெரிவித்துள்ளார். அதற்கு ஜெப்ரி Safety Certificate கூட சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரத்தை தெரிவித்தபோது அதை அவருடன் இருந்த அலுவலரிடம் கேட்டு உறுதிபடுத்தியுள்ளார். அதன் பின்னர் மேற்படி AEE திரு.கதிர்வேல் அவர்கள் எனது Project Engineer திரு.ஜெப்ரியை சின்னவேடம்பட்டியிலுள்ள தனது அலுவலகத்திற்கு வந்து அவரை நேரில் சந்திக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். அதன்படி 12.06.2026-ம் தேதி காலை திரு.ஜெப்ரி மேற்படி AEE திரு.கதிர்வேல் அவர்களை அவரது அலுவலகத்தில்

வைத்து நேரில் சந்தித்து பேசியபோது, எங்களுடைய Project மதிப்பான ரூ.20,00,000/-க்கு மேலென்பதை தான் திரு.சண்முகம் அவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொண்டதாகவும், அத்தொகையில் 10% தொகையான ரூ.2,00,000/- தனக்கு கொடுத்தால்தான், அவர் எங்களது Project வேலைகள் தொடர்பான அறிக்கையை கொடுத்து நெட்மீட்டர் பொருத்த பரிந்துரை செய்வாரென்றும் தெரிவித்துள்ளார். அதற்கு திரு.ஜெப்ரி சார் அவ்வளவு எல்லாம் கொடுக்கமுடியாது என்றும் தெரிவித்துள்ளார். உடனே AEE திரு.கதிர்வேல் அவர்கள் சரி கிலோ வாட்டுக்கு 2000 ரூபாய் வீதம் 60 கிலோவாட்டுக்கு ரூ.1,20,000/- கொடுக்குமாறு கேட்டுள்ளார். அதற்கு ஜெப்ரி மேற்படி தொகை குறித்து தான் எதுவும் முடிவுசெய்யமுடியாதென தெரிவித்துள்ளார். உடனே AEE திரு.கதிர்வேல் அவர்கள், என்னை நேரில் வந்து அவரை சந்திக்குமாறு ஜெப்ரியிடம் தெரிவித்துள்ளார். அதன்படி நானும் 15.06.2026-ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் சின்னவேடம்பட்டியிலுள்ள கௌமார மடாலயத்தின் அருகில் அமைந்துள்ள AEE திரு.கதிர்வேல் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று அவரை நேரில் சந்தித்து என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பேசியபோது அவர் தான் ஏற்கனவே எனது நிறுவன ஊழியரிடம் அனைத்து விபரங்களையும் தெரிவித்துள்ளதாக தெரிவித்தார். அதற்கு நான் நீங்க சொன்ன தொகை அதிகமாக இருப்பதாக தெரிவித்தபோது AEE திரு.கதிர்வேல் அவர்கள் மெல்லிய குரலில் கிலோவாட்டுக்கு என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய இடது உள்ளங்கையில் 2 என்று அவரது வலது கைவிரலால் எழுதி காண்பித்து அவ்வளதானே சொல்லியுள்ளேன் என்று தெரிவித்தார். அதற்கு நான் சார் என்னுடைய மற்ற Director-களிடம் கலந்துபேசிவிட்டு போன் செய்வதாக தெரிவித்தேன். உடனே அவர் தன்னுடைய Personal Cell number 9443090416-லிருந்து எனக்கு Missed Call கொடுத்து மேற்படி நம்பரில் தன்னை Whats App Call-ல் கூப்பிடும்படி தெரிவித்தார். அன்றையதினம் மாலை நான் அவர் சொன்னது போல் Personal Cell number-ஐ Whats App Call-ல் தொடர்புகொண்டபோது அது connect ஆகவில்லை என்பதால் அவருடைய

மற்றொரு எண்ணான 9445851102-க்கு Whats App Call-ல் தொடர்புகொண்டு, அவர் கிலோ வாட்டுக்கு 2000 ரூபாய் என்பது மிகவும் அதிகம் என்றும் மேற்படி தொகையை நான்தான் தரவேண்டுமென்றும் அதனால் மேற்படி தொகையை குறைத்துக் கொள்ளும்படியும் நான் கேட்டுக்கொண்டதின்பேரில் அவர் சரி கிலோவாட்டுக்கு 1,500 ரூபாய் கணக்குபோட்டு கொடுத்திடுங்க நான் வேலையை முடித்துத் தருகிறேன் என்று சொல்லி அவரே என்னை திரும்பவும் கூப்பிடுவதாக தெரிவித்து அழைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் அன்றையதினம் 9788850425 என்ற நம்பரிலிருந்து Kathirvel என்ற பெயரில் எனக்கு ஒரு Whats App Call-ல் வந்தது. அந்தசமயத்தில் நான் Lift-ல் வந்து கொண்டிருந்ததால் என்னால் அந்த அழைப்பை எடுக்க முடியவில்லை. உடனே நான் அந்த நம்பரை திரும்ப Whats App Call-ல் தொடர்பு கொண்டபோது AEE திரு.கதிர்வேல் அவர்கள் பேசினார். அப்போது அவர் எங்கே இருக்கீங்க என்று கேட்டார். நான் பீளமேட்டிலுள்ள எனது அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தேன். அதற்கு அவர் தான் அலுவலகத்திலிருப்பதாகவும் பணம் கொண்டு வறீங்களா என்றும் கேட்டார். அதற்கு நான் முக்கியமான வேலையில் இருந்ததால் என்னால் வரமுடியாத விபரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் அலுவல் நிமித்தமாக ஊட்டிவரை செல்லஇருப்பதால் தன்னை 17.06.2026-ம் தேதி மதியத்திற்கு மேல் கூப்பிடும்படி தெரிவித்து மேற்படி அழைப்பை துண்டித்துவிட்டார். மேலும் 17.06.2026-ம் தேதி மதியம் எனது அலுவலக ஊழியர் திரு.கௌசிக் என்பவர் AEE திரு.கதிர்வேல் அவர்களை தொடர்பு கொண்டு அவரது விபரத்தை தெரிவித்து மேற்படி Project Approval குறித்து பேசியபோது அவர் நான் வந்தபிறகு பேசிக்கலாம் என்று AEE தெரிவித்தாக என்னிடம் சொன்னதின்பேரில் நான் 17.06.2026-ம் தேதி மதியம் 2.30 மணிக்குமேல் நான் AEE திரு.கதிர்வேல் அவர்களை தொடர்புகொண்டபோது அவர் எனது அழைப்பை எடுத்த உடனே அவசர அவசரமாக 5 மணிக்கு மேல் கூப்பிடும்படி சொல்லி அழைப்பை துண்டித்துவிட்டார். நான் எனது சொந்த வேலையில் கொஞ்சம் பிசியாக இருந்ததால் என்னால் அவரை தொடர்பு கொள்ள

மற்றொரு எண்ணான 9445851102-க்கு Whats App Call-ல் தொடர்புகொண்டு, அவர் கிலோ வாட்டுக்கு 2000 ரூபாய் என்பது மிகவும் அதிகம் என்றும் மேற்படி தொகையை நான்தான் தரவேண்டுமென்றும் அதனால் மேற்படி தொகையை குறைத்துக் கொள்ளும்படியும் நான் கேட்டுக்கொண்டதின்பேரில் அவர் சரி கிலோவாட்டுக்கு 1,500 ரூபாய் கணக்குபோட்டு கொடுத்திடுங்க நான் வேலையை முடித்துத் தருகிறேன் என்று சொல்லி அவரே என்னை திரும்பவும் கூப்பிடுவதாக தெரிவித்து அழைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் அன்றையதினம் 9788850425 என்ற நம்பரிலிருந்து Kathirvel என்ற பெயரில் எனக்கு ஒரு Whats App Call-ல் வந்தது. அந்தசமயத்தில் நான் Lift-ல் வந்து கொண்டிருந்ததால் என்னால் அந்த அழைப்பை எடுக்க முடியவில்லை. உடனே நான் அந்த நம்பரை திரும்ப Whats App Call-ல் தொடர்பு கொண்டபோது AEE திரு.கதிர்வேல் அவர்கள் பேசினார். அப்போது அவர் எங்கே இருக்கீங்க என்று கேட்டார். நான் பீளமேட்டிலுள்ள எனது அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தேன். அதற்கு அவர் தான் அலுவலகத்திலிருப்பதாகவும் பணம் கொண்டு வறீங்களா என்றும் கேட்டார். அதற்கு நான் முக்கியமான வேலையில் இருந்ததால் என்னால் வரமுடியாத விபரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் அலுவல் நிமித்தமாக ஊட்டிவரை செல்லஇருப்பதால் தன்னை 17.06.2026-ம் தேதி மதியத்திற்கு மேல் கூப்பிடும்படி தெரிவித்து மேற்படி அழைப்பை துண்டித்துவிட்டார். மேலும் 17.06.2026-ம் தேதி மதியம் எனது அலுவலக ஊழியர் திரு.கௌசிக் என்பவர் AEE திரு.கதிர்வேல் அவர்களை தொடர்பு கொண்டு அவரது விபரத்தை தெரிவித்து மேற்படி Project Approval குறித்து பேசியபோது அவர் நான் வந்தபிறகு பேசிக்கலாம் என்று AEE தெரிவித்தாக என்னிடம் சொன்னதின்பேரில் நான் 17.06.2026-ம் தேதி மதியம் 2.30 மணிக்குமேல் நான் AEE திரு.கதிர்வேல் அவர்களை தொடர்புகொண்டபோது அவர் எனது அழைப்பை எடுத்த உடனே அவசர அவசரமாக 5 மணிக்கு மேல் கூப்பிடும்படி சொல்லி அழைப்பை துண்டித்துவிட்டார். நான் எனது சொந்த வேலையில் கொஞ்சம் பிசியாக இருந்ததால் என்னால் அவரை தொடர்பு கொள்ள

முடியவில்லை. எனவே இன்று 18.06.2026-ம் தேதி மதியம் சுமார் 1.45 மணியளவில் நான் எனது செல்நம்பர் 9428942882-லிருந்து அவரது செல்நம்பர் 9443090416-க்கு தொடர்பு கொண்டு பேசி கிலோவாட்டுக்கு 1,500 வீதம் கேட்டதை கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படி கேட்டபோது அவருடன் Consumer இருப்பதாகவும் பின்னர் அவரே திரும்ப அழைப்பதாகவும் தெரிவித்து போனை வைத்துவிட்டார். சிறிது நேரம் கழித்து AEE திரு.கதிர்வேல் அவர்கள் என்னை 9788850425 என்ற நம்பரிலிருந்து Whats App Call-ல் தொடர்பு கொண்டார். அப்போது நான், அவரது AE எனது ஊழியரை அழைத்து இன்று மதியம் 3 மணிக்கு அலுவலகம் வரச்சொல்லிருப்பதாக தெரிவித்தேன். அதற்கு AEE திரு.கதிர்வேல் நான் நம்ம மேட்டரை பத்தி AE-யிடம் எதுவும் சொல்லவில்லை என்றும் நீங்க என்னஏதுன்னு கரெக்டா சொன்னாதான் மேற்கொண்டு எங்க வேலையை செய்யமுடியுமென்றும், தான் AE-யிடம் பேசிக்கொள்வதாகவும் தெரிவித்து தான் கடந்த இரண்டு நாட்களாக அலுவலக வேலையாக வெளியில் இருந்ததாகவும், இனிமேல் லோக்கலில்தான் இருப்பேன் என்றும் இப்ப பணத்துடன் வறீங்களா என்றும் கேட்டார். அதற்கு நான் கொஞ்சம் வேலையிருப்பதால் என்னால் உடனே வாமுடியாது என்று தெரிவித்தேன். அதற்கு அவர் தான் நாளையும் அலுவலகத்தில்தான் இருப்பேனென்றும், நாளை வந்து தன்னை பணத்துடன் பார்க்கும்படியும் தெரிவித்தார். நானும் வேறு வழியில்லாததால் நாளைக்கு வருவதாக தெரிவித்து, சார் ரூ.90,000/-லிருந்து ஏதாவது குறைத்து கொள்ளமுடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர்ஒத்துக்கொள்ளவில்லை. மேலும் எனக்கு மேற்படி AEE திரு.கதிர்வேல் அவர்களுக்கு Solar Project-க்கு லஞ்சம் கொடுக்கவிருப்பம் இல்லை. எனவே எனது உறவினர் திரு.சண்முகம் அவர்களின் பெயரிலுள்ள தொழிற்சாலை கட்டிடத்தில் தயார் நிலையில் உள்ள எனது நிறுவனத்தின் 60Kw Roof-Top Solar Project-க்கான Net-Meter பொருத்துவதற்கு பரிந்துரை செய்ய ரூ.90,000/- லஞ்சமாக கேட்கும் மேற்சொன்ன சரவணம்பட்டி உதவி செயற்பொறியாளர் திரு.கதிர்வேல் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்கு,sd.XXXXX (M.Deepan). நாள்:18.06.2026,இடம்: கோவை. Respected Madam, Received the complaint on 18.06.2026at about 17.30 hrs. sd.XXXXX, (R.Ezhilarasi) 18.06.2026,Inspr. VAC. CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.7/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 19.06.2026at about 07.15 hrs. sd.XXXXX,(R.Ezhilarasi) 19.06.2026, Inspr.VAC. CBE.இம்முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

19/06/2026

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.